மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 09 புதன்கிழமை 24.12.2025 கதிர் 418







# தெற்கு கடலில் பெருந்தொகையான போதைப்பொருள் மீட்பு!

## படகில் இருந்த ஐவர் கைது



கொழும்பு, டிச. 24

இலங்கையின் தெற்குப் பகுதியில் கைப்பற்றப்பட்ட ஆழ்கடல் மீன்பிடிப் படகில் இருந்து பெருந்தொகையான ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டன.

இவற்றின் சந்தைப் பெறுமதி 200 கோடி ரூபா வரை இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆழ்கடல் மீன்பிடிப் படகொன்றில் போதைப்பொருள் கடத்தப்படுகின்றது என்று கடற்படையினருக்குப் புலனாய்வுத் தகவல் கிடைக்கப்பெற்றது.

இதையடுத்து அந்தப் படகு 7➤

# கொழும்பில் என்.பி.பி. ஆட்சிக்கு எந்தவித அச்சுறுத்தலும் இல்லை!

## அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிப்பு



கொழும்பு, டிச. 24

கொழும்பில் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஆளுகையின் கீழுள்ள கொழும்பு மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடைந்துள்ளமை தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

"கொழும்பு மாநகர சபையின் வரவு - செலவுத் திட்டம் தோல்வி அடைந்திருந்தாலும் நிர்வாக நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு எவ்வித தடையும் இல்லை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அடுத்த தடவை வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால்கூட அடுத்த வருடம் வரை மேயரை மாற்ற வேண்டியதில்லை.

மூன்றாவது தடவை தோற்கடிக்கப்பட்டால் புதிய மேயரைத் தெரிவு செய்ய வேண்டும். இதுவும் கொழும்பு மாநகர சபையில் எதிரணி தரப்புக்கு சவால் மிக்க விடயமாக அமையும். அதற்குரிய பெரும்பான்மை இல்லை.

எனவே, கொழும்பு மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை." - என்றார்.

# சீனாவின் அபிவிருத்திச் சாதனையை பாராட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



கொழும்பு, டிச. 24

"New Blueprint New Horizon" என்ற கருப்பொருளின் கீழ் சீனாவின் 15 ஆவது ஐந்தாண்டுத் திட்ட வரைபடத்தின் விழாவில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சீன மக்கள் குடியரசின் அபிவிருத்திச் சாதனைகளைப் பாராட்டினார்.

சீனாவின் 15 ஆவது ஐந்தாண்டுத் திட்ட வரைபடமான New Blueprint New Horizon வெளியீட்டி 7➤

# அர்ச்சுனாவுக்குப் பிணை



கொழும்பு, டிச. 24

கொழும்பு, கோட்டை பொலிஸாரால் இன்று முற்பகல் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பிற்பகல் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கோட்டை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தனது கடமையைச் 7➤

# பருத்தித்துறையில் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கியஆணின் சடலம்!



பருத்தித்துறை, டிச. 24

யாழ். பருத்தித்துறை - இன்பர்சிட்டி கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் இன்று கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ள பருத்தித்துறைப் பொலிஸார், சடலத்தை அடையாளம் காணப் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

சடலத்தில் நீல நிற டெனிம் காற்சட்டையும், பிறவுண் கலர் ரீ சேர்ட்டும் காணப்படுகின்றது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தச் சடலம் 7➤



# சிவனொளிபாதமலையில் இராணுவத்தினரின் துரித புனரமைப்பு பணிகள்

கொழும்பு, டிசெ.24

சிவனொளிபாதமலை - ஹட்டன் வீதியில் மண்சரிவுக்கு உள்ளான மகாகிரிதம்ப பிரதேசத்தின் படிக்கட்டுகள் மற்றும் பாதுகாப்பு வேலிகளை இராணுவத்தினர் தற்போது துரிதமாக புனரமைத்து வருகின்றனர்.

சிவனொளிபாதமலை பாதையின் மகாகிரிதம்ப பகுதியில் யாத்திரிகர்களால் சூழலில் வீசப்பட்ட கழிவுகளின் மீது வளர்ந்த ஆக்கிரமிப்பு தாவரங்கள், மழையுடன் சேர்ந்து கழிவுகளோடு கீழே சரிந்து பாதுகாப்பு வேலியின் மீது விழுந்ததால் வேலிக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. குறித்த பகுதியில் ஏற்பட்ட மண்சரிவு தொடர்பில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஸ்தல ஆய்வு மேற்கொண்டு வழங்கிய பரிந்துரைகளுக்கு அமைய, இராணுவத்தினரால் பாதிக்கப்பட்ட இடத்தில் புனரமைப்பு பணிகள் முன்னெடுக்கப்படுவதாக 'அத தெரண' செய்தியாளர் தெரிவித்தார். இவ்வீதியின் புனரமைப்பு பணிகள் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகவும், பணிகள் நிறைவடைந்த பின்னர் யாத்திரிகர்கள் எவ்வித சிரமமுமின்றி சிவனொளிபாதமலை யாத்திரையை மேற்கொள்ள முடியும் எனவும் சிவனொளிபாதமலை விகாராதிபதி பெங்கமுவே ஸ்ரீ தம்மதின்ன தேரர் தெரிவித்தார். (ஐ)

# சிவப்பு எச்சரிக்கை நீக்கப்பட்டாலும் மண்சரிவு அபாயம் நீங்கவில்லை

கொழும்பு, டிசெ.24

மண்சரிவு தொடர்பான சிவப்பு எச்சரிக்கைகள் நீக்கப்பட்ட போதிலும், அந்த இடங்களில் இன்னும் ஆபத்து நீங்கவில்லை எனத் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

மழை நிலைமை குறைவடைந்ததன் காரணமாகச் சிவப்பு எச்சரிக்கை நீக்கப்பட்டிருந்தாலும், அதிகாரிகள் வந்து குறித்த ஆபத்தான இடங்களைப் பரிசோதிக்கும் வரை பொதுமக்கள் அந்த இடங்களுக்குச் செல்ல வேண்டாம் என அந்த அமைப்பின் சிரேஷ்ட விஞ்ஞானி ஹசலி சேமசிங்க பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# குடு ரொஷான் கைது

போதைப்பொருள் கடத்தல்காரரான 'குடு ரொஷான்' என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளிய பகுதியில் அமைந்துள்ள அவரது வீட்டில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 9 மி.மீ. ரக பிஸ்டல் ஒன்றும், அதற்குப் பயன்படுத்தப்படும் 3 தோட்டாக்களும் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

இதனிடையே, அம்பலாங்கொட நகரில் உள்ள வர்த்தக நிலையமொன்றின் முகாமையாளர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு உடந்தையாக செயற்பட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கொள்ளுப்பிட்டி பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை காலை அம்பலாங்கொடையில் உள்ள வர்த்தக நிலையத்திற்குள் புகுந்த இனம் தெரியாத இரு துப்பாக்கிதாரிகள், முகாமையாளரைச் சுட்டுக் கொன்றுவிட்டுத் தப்பிச் சென்றிருந்தனர்.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் அம்பலாங்கொட, குருதுவத்தை - ஆந்தாதொல வீதியில் கைவிடப்பட்ட நிலையில் பின்னர் மீட்கப்பட்டது. துப்பாக்கிச்சூட்டின் பின்னர் துப்பாக்கிதாரிகள் இருவரும் பயணித்த குறித்த மோட்டார் சைக்கிளை அந்த இடத்திற்கு கொண்டு வந்தவர் இவரே என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான ஏனைய சந்தேக நபர்களைக் கண்டறிய விசாரணைகள் தொடர்கின்றன.

இதேவேளை, வெலிகம பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் லசந்த விக்கிரமசேகர தனது அலுவலகத்திற்குள் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த கொலைக்கு உடந்தையாக செயற்பட்ட குற்றச்சாட்டில் வெலிகம பிரதேசத்தில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட்) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# ஜனவரி முதல் கல்வி சீர்திருத்தம் நடைமுறைக்கு சாத்தியமில்லை



எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் புதிய கல்வி சீர்திருத்தத்தை அமுல்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியால் முன்னெடுக்கப்பட்டு வரும் மூச்சுத் திட்டத்தின் கீழ், ஹெம்மாத்தகம பிரதேச வைத்தியசாலைக்கு 28 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வைத்தியசாலை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (24) இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

மக்களினதும், பாடசாலை மாணவர்களினதும் மனநிலைகள் குறித்து நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அவர்களினது அடிப்படை உரிமைகளை மீறக் கூடாது. பாடசாலைக் கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கு அரசாங்கத்திடம் சரியான திட்டமொன்று இல்லாமையால் பிள்ளைகளே பாதிப்பட்டுள்ளனர்.

அரசாங்கம் விரும்புவது போல் ஜனவரி முதல் புதிய சீர்திருத்தங்களை அமுல்படுத்துவது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்பதால், இது குறித்து சிந்தித்துப் பார்த்து நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன்.

இத்தருணத்தில் மக்கள் எந்தளவு உதவியற்றவர்களாக காணப்படுகின்றனர் என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் கூற்றுப்படி, இந்தப் பேரழிவால் 374,000 தொழில்கள் இழக்கப்பட்டுள்ளன.

23% விவசாய காணிகளும் 35% தேயிலைத் தோட்டங்களும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன.

மாதத்திற்கு ரூபா.48 மில்லியன் அமெரிக்க டொலர் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

சிறிய தேயிலைத் தோட்ட உரிமையாளர்களின் தேயிலை காணிகள் கூட அழிந்துபோயுள்ளன.

அரசாங்கம் வீராப்பு பேசிக் கொண்டிருக்காமல், மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளின் வழிமுறைமைக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)

## கொழும்பில் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு உயரிய கௌரவம்



கொழும்பு, டிசெ.24

அகில இலங்கை மக்கள் திலகம் கலை கலாச்சார சமூக சேவை சங்கமும் கலைஶ்ரீ கலை மன்றமும் இணைந்து நடத்திய "பாடுவோர் பாடலாம், ஆடுவோர் ஆடலாம்" எனும் கலை நிகழ்வும், சிரேஷ்ட கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வும் அண்மையில் கொழும்பு 11 - பிரதேச செயலக கலாச்சார மண்டபத்தில் மிக விமரிசையாக நடைபெற்றது.

கொழும்பு பிரதேச உப செயலாளர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சங்கவி பில்ம்ஸ் மற்றும் சங்கவி தியேட்டர்ஸின் தலைவர் "சங்கவி சுரேஷ்" பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இவருடன் அதிதியாக கலாபூஷணம், இலங்கை பொன்மனச் செம்மல் எம்.எஸ். தாஜ்மஹான் கலந்துகொண்டதுடன், கொழும்பு பிரதேச செயலக கலாச்சார உத்தியோகத்தர் ரோஸ் மேரி முன்னிலை வகித்தார். அரங்கம் நிறைந்த கலைஞர்கள் மற்றும் ஆர்வலர்கள் மத்தியில் இச் சிறப்பான கலை விழா அரங்கேறியது.

இலங்கையின் பிரபல சிரேஷ்ட கலைஞரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும், சமூகசேவையாளருமான ஜோசப்பெர்ணாண்டோவுக்கு இந்நிகழ்வில் பொன்னாடை அணிவித்து கௌரவம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தமிழ், முஸ்லிம், சிங்கள கலைஞர்களினால் ஆடல், பாடல் மற்றும் மேடை நாடகங்கள் எனப் பல கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றப்பட்டன.

இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் வருகை தந்திருந்த சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட கலைஞர்களுக்கு பொன்னாடை போர்த்தி சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, ஊடகங்களின் வாயிலாக கலைத்துறைக்கு பாரிய பங்காற்றிய ஊடகவியலாளர்களும் இதன்போது விசேடமாக கௌரவிக்கப்பட்டனர்.

கலைத்துறையை மங்க விடாமல் தொடர்ந்து "பாடுவோர் பாடலாம், ஆடுவோர் ஆடலாம்" எனும் இந்தத் தொடர் நிகழ்வினை முன்னெடுத்து வரும் கலைஞர் "கலைஸ்ரீ - ஸ்ரீபாலனின்" அயராத கலைப் பணிக்கு, இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளில் இருந்தும் வருகை தந்திருந்த கலைஞர்களும் ஊடகவியலாளர்களும் தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் இதன்போது மனமார்ந்து தெரிவித்தனர். (ஐ)

## சிவபுரம் குத்துப்பாலத்தை அமைக்க 500 மில்லியன் ஒதுக்கீடு



மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள சிவபுரம், குத்துப்பாலத்தினை அமைக்குமாறு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபாலவிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் குறித்த சிவபுரம் குத்துப் பாலத்தினை அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் ஆனந்த விஜயபால தகவல் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் தொடர்பான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனிக்குளத்தின் கீழ்வரும் சிவபுரம் குத்துப் பாலம் நிர்மாணிக்கப்படவேண்டும். வெள்ள அனர்த்தம் ஏற்படும்போது இந்த சிவபுரம் குத்துப் பாலத்தினூடான வீதிப்போக்குவரத்து முற்றாகத் தடைப்படும். இதனால் மாந்தைகிழக்கு தனித் தீவாக மாறுகின்ற நிலமை ஏற்படுகின்றது.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகக் காணப்படுகின்றது. அத்தகைய முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக மாந்தை கிழக்குப் பிரதேசம் காணப்படுகின்றது.

எனவே இந்த நிலைமைகளைக் கருத்திற்கொண்டு தற்போது ஆற்றுச்சருக்கையாக (கோஸ்வேயாக) காணப்படும் சிவபுரம் குத்துப்பாலத்தினை, மழைக்காலத்திலும் போக்குவரத்து தடைப்படாத வகையில் இருக்க அப்பாலத்தை பாரிய பாலமாக அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

இந்நிலையில் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜயபால இதன்போது பதிலளிக்கையில்,

குறித்த சிவபுரம் குத்துப்பாலத்தினை அமைப்பதற்கு 500மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுவிட்டதாக பதிலளித்தார். (ஐ)

# அமமுகவை தவிர்த்து விட்டு யாராலும் தேர்தலில் வெற்றி பெற முடியாது: டி.டி.வி. தினகரன் திட்டவட்டம்



தேசிய ஜனநாயக கூட்டணியில் எங்களுக்கு 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டதாக பரவும் வதந்தியை நம்ப வேண்டாம் என அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் விளக்கம் அளித்துள்ளார். சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர், "தகவல் என்ற பெயரில் வதந்திகளை பரப்பி எங்களுக்கு எதிராக சதி செய்கின்றனர். எந்த கூட்டணி எங்களுக்கு வேண்டும் என்பதை நாங்கள்தான் முடிவு செய்வோம். கூட்டணியில் இணையுமாறு யாரும் எங்களை நிர்பந்திக்க முடியாது. தமிழ்நாட்டின் நலனுக்கு ஏற்றாற்போல், அமமுகவுக்கு எது நல்லதோ அதற்கு ஏற்றாற்போல் நாங்கள் கூட்டணி முடிவு எடுப்போம். நாங்கள் எந்த கூட்டணில் இருந்தாலும் ஆண்டிபட்டி தொகுதியில் அமமுக வேட்பாளர்தான் கண்டிப்பாக போட்டியிடுவார்.

தே.ஜ.கூட்டணியில் அமமுகவுக்கு 6 தொகுதிகள் என்பது உண்மையானது அல்ல. கூட்டணியே அமையாதபோது எங்களுக்கு 6 தொகுதிகள் ஒதுக்கப்பட்டதாக கூறுவது அபத்தம். தமிழ்நாட்டில் தவிர்க்கமுடியாத இயக்கமாக அமமுக உள்ளது. விலை போகாத நிர்வாகிகள் எங்களுடன் இருக்கின்றனர். அமமுகவை தவிர்த்து விட்டு யாராலும் தேர்தலில் வெற்றி பெற முடியாது. ஜெயலலிதாவுக்கு உறவுகள் இல்லாதபோது குடும்ப நண்பர்களாக நாங்கள் நின்றோம். தன்மானத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட கட்சி அமமுக. எங்கள் கட்சிக்கான கட்டமைப்பு பலமாக இருக்கிறது. கூட்டணிக்கு வர வேண்டும் என்று முக்கிய கட்சிகள் அழைப்பது உண்மை. தை மாதம் பிறந்த பிறகு கூட்டணி குறித்து முடிவு எடுப்போம். இந்த முறை உறுதியாக அமமுகவில் இருந்து சட்டமன்றத்துக்கு செல்வோம்,"இவ்வாறு பேசினார். (ஐ)

## விவசாயிகளின் வயிற்றிலடிக்கும் திமுக: நயினார் நாகேந்திரன் காட்டம்



வாழ்விழந்த விவசாயிகளின் வயிற்றில் திமுக அரசு அடிக்கிறது என தமிழக பாஜ தலைவர் நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை: டிட்வா புயலால் பாதிப்படைந்த அனைத்து டெல்டா விவசாயிகளுக்கும் பல வாரங்களாகியும் திமுக அரசு இன்னும் இழப்பீடு வழங்கவில்லை. பழுதடைந்த அரசு தானியக்கிடங்குகளாலும், கொள்முதல் செய்வதில் அரசு காட்டிய அலட்சியத்தாலும் தான் பல டன் நெல்மூட்டைகள் மழையில் நனைந்து முளைப்பு கட்டிப்போயின.

தங்களின் பல மாத உழைப்பு பாழாய்ப்போனதைக் கண்டு கலங்கி நிற்கும் விவசாயிகளுக்கு நேரில் சென்று ஆறுதல் சொல்லாமல், நெற்பயிர்களைப் பார்சலில் கொண்டு வந்து ஆய்வு செய்தார் முதல்வர். ஆய்வு செய்து பல வாரங்களாகியும் விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப இழப்பீட்டுத் தொகையை இன்னும் வழங்காமல் திமுக அரசு இழுத்தடிப்பது நியாயமல்ல.

''நானும் டெல்டாகாரன்' என மேடையில் முழங்குவதை விட, ஏக்கருக்கு ரூ. 30,000 இழப்பீடு வழங்கி விவசாயிகளின் துயரத்தைத் துடைப்பது தான் சாலச் சிறந்தது என்பதை முதல்வருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். வாழ்விழந்த விவசாயிகளின் வயிற்றில் திமுக அரசு அடிக்கிறது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத் தகுந்த இழப்பீடு வழங்காமல் வஞ்சித்து வரும் திமுக அரசின் அலட்சியமே அக்கட்சியின் ஆட்சி அரியணைக்கு முடிவுரை எழுதப்போகிறது. இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார். (ஐ)




## 100 நாள் வேலைத் திட்டத்தில் மாற்றத்திற்கு எதிர்ப்பு தமிழகம் முழுவதும் 389 இடங்களில் திமுக கூட்டணி ஆர்ப்பாட்டம்

100 நாள் வேலைத் திட்டத்தில் மாற்றத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகம் முழுவதும் 389 இடங்களில் திமுக கூட்டணி கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

100 நாள் வேலைத் திட்டத்தில் மத்திய அரசு மாற்றங்கள் செய்ததை கண்டித்து திமுக கூட்டணி கட்சியினர் நடத்திய போராட்டங்களை முதல்வர் ஸ்டாலின் சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். அவரது அறிக்கை:

மஹாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டத்தை மீட்டெடுக்கவும், தங்களது வாழ்வாதாரத்தைக் காத்துக்கொள்ளவும் தமிழகம் முழுவதும் 389 இடங்களில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்த ஏழை விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

இது தமிழகத்தில் இருந்து ஒலிக்கும் ஒட்டுமொத்த இந்திய விவசாயிகளுக்கான குரல் என்பதை, காந்தியின் மீது வெறுப்புணர்வோடு செயல்படும் மத்திய பாஜ ஆட்சியாளர்கள் உணர வேண்டும். ஏழைகளின் வாழ்வாதாரத்தை உறுதிசெய்ய வேண்டும். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)

# கேரளாவின் இரு மாவட்டங்களில் பரவுகிறது பறவை காய்ச்சல்

கேரளாவின் ஆலப்புழா மற்றும் கோட்டயம் மாவட்டங்களில் பறவை காய்ச்சல் பாதிப்பு இருப்பதை, மத்திய ஆய்வகம் உறுதி செய்துள்ளதாக மாநில கால்நடை துறை அமைச்சர் சிஞ்சு ராணி தெரிவித்துள்ளார்.

கேரளாவின் ஆலப்புழா மற்றும் கோட்டயம் மாவட்டங்களில் பறவை காய்ச்சல் பரவுவதாக கடந்த வாரம் தகவல் வெளியானது. இதையடுத்து கோழிப்பண்ணைகளில் பறவைகளின் மாதிரிகளை சேகரித்த மாநில கால்நடை துறை அதிகாரிகள், அவற்றை மத்திய பிரதேசத்தின் போபாலில் உள்ள மத்திய ஆய்வகத்துக்கு அனுப்பி வைத்தனர். இதில், பறவை காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டதாக மாநில கால்நடை துறை அமைச்சர் சிஞ்சு ராணி தெரிவித்தார்.



இது குறித்து அமைச்சர் மேலும் கூறியதாவது: ஆலப்புழாவில் நெடுமுடி, செருதனா, கருவட்டா கார்திகபள்ளி, அம்பலபுழா தெற்கு, புன்னப்ரா தெற்கு, தகழி, புறக்காடு போன்ற பகுதி களிலும், கோட்டயம் மாவட்டத்தில் குருப்பந்தரா, கல்லுபுரயக்கல், வெல்லூர் போன்ற பகுதி களிலும் பறவை காய்ச்சல் பாதிப்பு இருப்பது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

தற்போது பறவை காய்ச்சலை மதிப்பீடு செய்யும் பணியை, கால்நடை துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். எனினும் கோழிப்பண்ணைகளில் இருந்து கிடைக்கும் இறைச்சி, முட்டை போன்றவற்றை பயன்படுத்த எந்த தடையும் விதிக்கவில்லை. தொடர் கண்காணிப்புக்கு பின், தேவைப்பட்டால் கோழிகளை கொல்வது, முட்டை மற்றும் இறைச்சிக்கு தடை விதிப்பது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டையொட்டி கோழி இறைச்சி, முட்டை விற்பனை அதிகரிக்கும் நிலையில், பறவை காய்ச்சல் பரவுவது பண்ணையாளர்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது.

தேவைப்பட்டால் கோழிப்பண்ணையாளர்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து முடிவு செய்யப்படும். வெளிநாட்டில் இருந்து வரும் பறவைகள் மூலம் தான் கேரளாவில் பறவை காய்ச்சல் பரவுகிறது. கடந்த ஆண்டிலும் இதேபோல் கோட்டயம், ஆலப்புழா மற்றும் பத்தனம்திட்டாவில் பறவை காய்ச்சல் பரவியது. இவ்வாறு அவர் கூறினார். (ை)



# வாழ்வைக் கொண்டாடலாம்!

-ஷகி

குடும்பத்திற்கான WHO கொடுக்கும் வரையறை: 'இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மனிதர்கள் பிறப்பினாலோ திருமணத்தினாலோ அல்லது தத்தெடுப்பது மூலமாகவோ சேர்ந்து வாழும் அமைப்பு' என்பதே.

ஆனால், மனரீதியான பிணைப்பை, உணர்வுரீதியான நெருக்கத்தைத் திருமணம் என்ற சடங்கு உருவாக்கிவிட முடியாது. இரு மனிதர்களுக்கு இடையேயான அன்பும் அன்யோன்யமும் மட்டுமே கொண்டுவர முடியும்.

திருமண உறவாக இருந்தாலும் சரி, லிவ்விங் டுகெதர் அல்லது காதல் உறவாக இருந்தாலும் சரி, அன்யோன்யமான உறவுகள் அல்லது நெருக்கமான உறவுகள், மிகவும் கஷ்டமான ஒன்றாக, சிக்கல்கள் நிறைந்ததாக இருக்கின்றன. நிறைய பேர் வாழ்வில் காண கிடைக்காத ஒன்றாகவும்கூட இருக்கின்றன.

இந்த உறவுகளின் சிறப்பும் தனித்தன்மையும் என்னவென்றால், நம்மையும் மீறிய உணர்வுகளையும் நம்மையும் மீறி உணர்வுகள் நம்மிடமிருந்து வெளிப்படுவதையும் சொல்லலாம்.

ஒருமுறை ஆராய்ச்சியாளர்கள் குடும்ப உறவில் ஏற்படும் பிணைப்பை, உணர்வு ரீதியான மாற்றங்களைப் பற்றி அறிந்துகொள்ள ஒரு தாய் முயலையும் இரண்டு குட்டி முயல்களையும் எடுத்துக்கொண்டார்கள்.

முதலில் இந்த மூன்று முயல்களையும் ஒரு வாரம் தனித்தனியே வைத்தார்கள். ஒரு வார இடைவெளிக்குப் பிறகு, அந்த அம்மா முயலின் முன்னால் ஒரு குட்டி முயலை துன்புறுத்தினார்கள். அந்த அம்மா முயலின் இதயத் துடிப்பும் ரத்த அழுத்தமும் மிக அதிகமானது.

மீண்டும் ஒரு வாரம் கழித்து இன்னொரு குட்டி முயலை, தாய் முயலிடமிருந்து வெகுதூரத்தில் வைத்து அந்த ஆராய்ச்சியாளர்கள் காயப்படுத்தினார்கள். வெகுதூரத்தில் இருக்கும் தனது குட்டி முயலுக்குத் துன்பம் நிகழ்ந்த போது, அந்த அம்மா முயலின் இதயத் துடிப்பும் ரத்த அழுத்தமும் அதிக அளவு அதிகமானது.

இதே மாதிரி நம்மையும் மீறிய உணர்வுகளை, நம்மையும் மீறி நாம் செய்யும் ஒரு சில செயல்களை, இந்த நெருக்கமான உறவுகளில், காதல் உறவுகளில் **(intimate relationships)** பார்க்கலாம்.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று ஏன் அவ்வளவு எளிதாக அமைவது இல்லை?

தன்னுடைய முப்பத்தி எட்டு வயதில், காதல் உறவில் இருந்து வெளியே வந்தவர்தான் சரவணன். இப்போதுதான் சுதந்திரமாக இருக்கிறேன். பிடித்ததைச் செய்கிறேன். தனியாக வாழ்வதுதான் இன்பமாக உள்ளது என அடிக்கடி பெருமையாகச் சொல்லிக்கொள்வார்.

அதே சரவணன் சில நேரம் இப்படியும் சொல்வார்: அலுவலகம் முடிந்து வரும்போது, கதவைத் திறந்து நுழையும்போது வெறிச்சென்று இருக்கிறது. ஊர் சுற்றப் போனால்கூட, முடித்துவிட்டு வரும்போது மிகவும் வெற்றிடமாக உள்ளது. ஏதாவது கவலையாக உள்ளபோது. அதைப் பகிர்ந்துகொள்ளக்கூடப் பக்கத்தில் யாரும் இல்லாததுபோல் இருக்கும்."

ஒருமுறை அவரிடம் உங்களுக்காக ஒரு துணையை ஏற்படுத்திக்கொள்ள எது தடையாக இருக்கிறது எனக் கேட்டேன். இரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டு சொன்னார்.

1. என்னுடைய இப்போதைய சுதந்திரம் பறிபோய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

2. வரும் இன்னொரு நபருக்காக என்னை, நான் வாழுமிடத்தை நிறைய மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் பயமாக இருக்கிறது.

தான் நினைத்தபடி எல்லாம் இருக்க வேண்டும் என்ற ஆசையும் எதற்காகவும் அதை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்ற எண்ணமும், நான் வாழுமிடத்தைகூட அட்ஜஸ்ட் செய்ய மாட்டேன் என்றால் தனியாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டியது தானே என்றேன்.

இருக்கலாம்தான். ஆனால், எப்போதுமே தனிமையில் இருக்கவும் சங்கடமாக இருக்கிறது. நண்பர்களில் பலர் திருமணம் முடிந்து குடும்ப வாழ்வில் பிஸியாகிவிட்டார்கள்.

திருமண வாழ்வும் நன்றாகத்தான் இருக்குமோ என்றும் சில நேரங்களில் தோன்றுகிறது. என்னைப் பற்றி என்னுடைய இன்ப துன்பங்களைப் பகிர்ந்துகொள்ள யாரும் அருகில் இல்லை என்றபோது கவலை என்னைச் சூழ்ந்துகொள்கிறது என்றார்.





இவர்களுக்கு உண்மையில் என்னதான் பிரச்னை? தனியாக இருப்பதும் பிடிக்கவில்லை. குடும்பமாக வாழ்வதும் பிடிக்கவில்லை. தனிமைக்கும் பயம், உறவில் இருப்பதற்கும், திருமணத்திற்கும் பயம்.

ஆனால், இந்தக் குழப்பம் சாதாரணமான ஒன்றுதான். ஏனென்றால், நாம் பார்த்த அல்லது எதிர்கொண்ட விஷயங்கள், குறிப்பாக உறவுகளில் சந்தித்த சரிவுகள் பயத்தை மனதில் ஏற்படுத்தி அன்யோன்ய உறவுகள் வேண்டாம் என முடிவெடுக்க வைத்திருக்கும்.

ஆனால், நாம் காலம் காலமாக வாழ்ந்துவந்தது தனிமையில் இல்லைதானே? எனவே நம்மையும் மீறிய ஓர் ஈர்ப்பு (7ஆம் பக்கம் பார்க்க..)

# கிறிஸ்துமஸ் அன்று போர் நிறுத்தக் கோரிக்கை நிராகரிப்பு ரஷ்யாவின் செயலால் போப் 14வது லியோ வேதனை



கிறிஸ்துமஸ் தினத்தன்று போர் நிறுத்தம் செய்யுமாறு விடுத்த கோரிக்கையை ரஷ்யா நிராகரித்திருப்பது வேதனை அளிப்பதாக போப் 14வது லியோ தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே கடந்த 2022, பிப்., முதல் போர் நடைபெற்று வருகிறது. இதனை முடிவுக்கு கொண்டு வர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகள் தீவிரமாக முயன்று வருகின்றன. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை தொடர்ந்து வருகிறது.

இதனிடையே, நாளை (டிசம்பர் 25) உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட உள்ள நிலையில், ஒருதினம் மட்டும் போர்களை நிறுத்தி, உலக அமைதியை கடைபிடிக்க வேண்டும் என்று போப் 14வது லியோ கோரிக்கை விடுத்தார். ஆனால் போப்பின் இந்தக் கோரிக்கையை ரஷ்யா நிராகரித்து விட்டது.

இதனால், வேதனை அடைந்த போப் 14வது லியோ ரோமிற்கு அருகே உள்ள காஸ்டல் கண்டால்போ இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது, அவர் கூறியதாவது கிறிஸ்துமஸ் தினத்தன்று போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ரஷ்யா நிராகரித்திருப்பது எனக்கு வேதனையளிக்கிறது.

எங்கள் கடவுளின் பிறந்த நாளில் குறைந்தபட்சம் ஒருநாளாவது, சமாதானத்தை கடைபிடிக்க வேண்டும் என்று நல்லெண்ணம் கொண்ட அனைவருக்கும் மீண்டும் கோரிக்கை விடுக்கிறேன். இந்தக் கோரிக்கையை அவர்கள் கேட்பார்கள் என்று நம்புகிறேன். உலகம் முழுவதிலும் 24 மணிநேர சமாதானம் நிலவும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, இவ்வாறு அவர் கூறினார்.

இந்த மாதத்தின் துவக்கத்தில் போப் 14வது லியோ உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலென்ஸ்கியை சந்தித்தார். அப்போது, உக்ரைனுக்கு வருமாறு போப்புக்கு அவர் அழைப்பு விடுத்தார். ஆனால், ‘ இது எப்போது சாத்தியமாகும் என்று சொல்ல முடியாது,’ என்று போப் 14வது லியோ பதிலளித்திருந்தார். (ஐ)

## ஜப்பானில் வயதானோர் எண்ணிக்கை அதிகரிப்பு 12 லட்சம் வெளிநாட்டினருக்கு வேலை



ஜப்பானில் நிலவும் நீண்டகால தொழிலாளர் பற்றாக்குறையை போக்க, மற்ற நாடுகளைச் சேர்ந்த 12 லட்சம் பேருக்கு வேலை வழங்க பிரதமர் சனே தகாய்ச்சி அரசு முடிவு செய்துள்ளது.

கிழக்கு ஆசிய நாடான ஜப்பானில், கடந்த 17 ஆண்டுகளாகவே மக்கள் தொகை வெகுவாக சரிந்து வருகிறது.

மேலும், அங்கு முதியோரின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. நாட்டின் 12.28 கோடி மக்கள் தொகையில், 100 வயதைக் கடந்தவர்கள் மட்டும் 50,000க்கும் அதிகமாக உள்ளனர்.

மேலும், 60 வயதுக்கு மேற்பட்டோர் எண்ணிக்கையும் கணிசமாக உள்ளது. இதனால், அந்நாட்டில் தொழிலாளர் பற்றாக்குறை என்பது பெரும் பிரச்னையாகவே உள்ளது.

இந்நிலையில், ஜப்பான் அரசு வெளிநாட்டு தொழிலாளர் கொள்கையில் பெரிய மாற்றங்களை செய்ய திட்டமிட்டுள்ளது.

அதன்படி, 2027 - 2029 வரை இரண்டு ஆண்டுகளுக்கு ‘திறன் மேம்பாட்டுக்கான வேலைவாய்ப்பு’ திட்டத்தின் கீழ், 12.31 லட்சம் வெளிநாட்டு தொழிலாளர்களை ஈர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மாற்றம், தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாக்கவும், நீண்டகால தங்குதலுக்கு வழி வகுக்கவும் உதவும். (ஐ)



## ஏமன் 2,700 கைதிகளை விடுவிக்க ஹவுதி அமைப்புடன் ஒப்பந்தம்

ஏமன் உள்நாட்டுப் போரின் போது பிடிக்கப்பட்ட 2,700 கைதிகளை விடுவிக்க ஏமன் அரசும், ஹவுதி பயங்கரவாத அமைப்பும் பரஸ்பரம் ஒப்பந்தம் போட்டுள்ளன.

தென்மேற்கு ஆசிய நாடான ஏமனில், சவுதி அரேபிய ஆதரவிலான கூட்டணி அரசுக்கும், ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி பயங்கரவாதிகளுக்கும் இடையே, 2014ம் ஆண்டு முதல் உள்நாட்டு போர் நடந்து வருகிறது. இந்தப் போரின்போது ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர் ஏராளமானவர்கள் பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், ஓமன் தலைநகர் மஸ்கட்டில், ஐக்கிய நாடுகள் சபையின் மத்தியஸ்தத்தின் கீழ் ஏமன் அரசு – ஹவுதி பயங்கரவாதிகள் இடையே 12 நாட்கள் பேச்சு நடைபெற்றது. முடிவில் ஹவுதி தரப்பில் இருந்து 1,700 கைதிகளையும், அரசு தரப்பில் இருந்து 1,200 கைதிகளையும் விடுவிப்பது என ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

விடுவிக்கப்படும் கைதிகளில் இரண்டு விமானிகள் உட்பட ஏழு சவுதி அரேபியர்களும், 23 சூடான் நாட்டவர்களும் அடங்குவர். கடந்த, 10 ஆண்டுகளில் இது மிகப்பெரிய கைதிகள் பரிமாற்றமாக பார்க்கப்படுகிறது. (ஐ)

## டிரம்ப் மீது பாலியல் குற்றச்சாட்டு... எப்ஸ்டீன் ஆவணங்களை பொய் என்கிறது அமெரிக்க நீதித்துறை

அமெரிக்க அதிபர் டிரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு குறித்த எப்ஸ்டீன் ஆவணங்கள் பொய்யானவை என்று அமெரிக்க நீதித்துறை விளக்கம் அளித்துள்ளது.

பாலியல் குற்றச்சாட்டு வழக்கில் கைது செய்யப்பட்ட பிரபல அமெரிக்க நிதியாளர் ஜெப்ரி எப்ஸ்டீன், சிறையிலேயே தற்கொலை செய்து கொண்டார். அவர் மீதான விசாரணை ஆவணங்களில் அமெரிக்க அதிபர் டிரம்ப் குறித்து அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகள் இடம்பெற்றிருப்பதாக தகவல் வெளியாகியது. குறிப்பாக, பல ஆண்டுகளுக்கு முன்பு பெண் ஒருவரை டிரம்ப் பாலியல் பலாத்காரம் செய்ததாகவும் எப்ஸ்டீன் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனவே, எப்ஸ்டீன் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் வெளியிட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

இதையடுத்து, எப்ஸ்டீன் ஆவணங்களை அமெரிக்க நீதித்துறை வெளியிட்டது. இது வெளியான 24 மணிநேரத்தில் ஆவணங்களில் இடம்பெற்றிருந்த டிரம்ப் தொடர்பாக போட்டோக்கள், எந்தவித விளக்கமும் இன்றி நீக்கப்பட்டன. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், மீண்டும் அந்தப் போட்டோக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டன.

இந்த நிலையில், டிரம்ப் மீதான பாலியல் குற்றச்சாட்டு குறித்து அமெரிக்க நீதித்துறை விளக்கம் அளித்துள்ளது. குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது என்று தகவல் தெரிவித்துள்ளது.

இது குறித்து எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘எப்ஸ்டீன் தொடர்பான 30 ஆயிரம் பக்க ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2020ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக எப்பிஐயிடம் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் அதிபர் டிரம்புக்கு எதிரான உண்மையில்லாத குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இவை முழுக்க முழுக்க அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளாகும். எனவே, இது அதிபர் டிரம்புக்கு எதிரான ஆயுதமாக பயன்படுத்தப்பட்டிருப்பது தெள்ளத் தெளிவாகியுள்ளது.

சட்டத்தின் மீதான நம்பகத்தன்மை மற்றும் வெளிப்படைத்தன்மையை பாதுகாக்கும் விதமாக, இந்த ஆவணங்கள் வெளியிடப்பட்டிருக்கிறது. லேரி நசாருக்கு எப்ஸ்டீன் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தின் உண்மைத் தன்மையை நீதித்துறை ஆய்வு செய்து வருகிறது. விரைவில் கூடுதல் தகவல்களை வழங்க முயற்சிப்போம்.

இந்தக் கடிதத்தில் உள்ள அஞ்சல் குறியீடு விர்ஜினியாவைச் சேர்ந்தது. அந்த சமயத்தில் எப்ஸ்டீன் நியூயார்க் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பதில் முகவரியும் தவறாக இருந்தது. அதில், எப்ஸ்டீனின் கைதி எண் குறிப்பிடவில்லை. அனைத்திற்கும் மேலாக எப்ஸ்டீன் மரணமடைந்த 3 நாட்களுக்குப் பிறகே, இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், அந்தக் கடிதத்தில் இருந்த கையெழுத்து எப்ஸ்டீனின் கையெழுத்துடன் பொருந்தவில்லை. எனவே, லேரி நசாருக்கு எப்ஸ்டீன் அனுப்பிய கடிதம் போலியானது என தெரியவந்துள்ளது.

இருப்பினும், சட்ட ரீதியாக தேவைப்படும் அனைத்து ஆவணங்களையும் நீதித்துறை தொடர்ந்து வெளியிடும், இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ)

## தெற்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வேளை, போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. படகில் இருந்த ஐவர் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளுக்காக கப்பல் இன்று காலை திக்ஹோவிட்ட மீன்பிடி துறைமுகத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

11 பொதிகளில் இருந்தே ஐஸ் மற்றும் ஹெரோயின் என்பன மீட்கப்பட்டன.

169 கிலோ ஐஸ் போதைப்பொருளும், 21 கிலோவுக்கு மேற்பட்ட ஹெரோயினும் பொதிகளுக்குள் இருந்துள்ளன என்று கடற்படையினர் தெரிவித்தனர்.

அதேவேளை, போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்ப முடியாது என்று மீன்பிடித் துறைமுகத்துக்கு சென்றிருந்த பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

போதைப்பொருளை ஒழிப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம் எனவும், மக்களால் வழங்கப்படும் தகவலின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியா - இராமேஸ்வரம் மீனவருடையதாக இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

## அர்ச்சுனாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்துகொண்டிருந்தபோது, அவருக்கு இடையூறு விளைவித்த சம்பவம் தொடர்பில் அர்ச்சுனா எம்.பி. மீது வழக்குத் தொடரப்பட்டது.

ஏற்கனவே இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட அர்ச்சுனா எம்.பி., நேற்றைய வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் முன்னிலையாகியிருக்கவில்லை. அதையடுத்து அவருக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்தது.

பிடியாணை உத்தரவுக்கு அமைய, அர்ச்சுனா எம். பி. இன்று முற்பகல் கோட்டை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்ததை அடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்து பிற்பகல் கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது அவரைப் பிணையில் விடுவிக்க கோட்டை நீதிவான் உத்தரவிட்டார்

## சீனாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

*நிகழ்வு இன்று கொழும்பிலுள்ள ஷாங்க்ரிலா ஹோட்டலில் இடம்பெற்றது. சீனத் தூதரகத்தின் அழைப்பின் பேரிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றினார்.*

*உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இராஜதந்திர பிரதிநிதிகள் மற்றும் அரசியல்வாதிகள் என பலர் இதில் கலந்து கொண்டனர்.*

*சந்தை அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சியை சமூக ஜனநாயகக்கொள்கைகளுடன் சீனா எவ்வாறு வெற்றிகரமாக இணைத்துள்ளது என்பதை எடுத்துக்காட்டி, நீதி மற்றும் நியாயத்துடன் செல்வத்தை உருவாக்குவதை எவ்வாறு உறுதி செய்வது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் தமதுரையில் எடுத்துக்காட்டினார்.*

*அவ்வாறே, வறுமை ஒழிப்பு, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் மாறிவரும் உலகளாவிய சவால்களுக்கு ஏற்ப அதன் ஈடுகொடுக்கும் இயைந்து போகும் ஆற்றல் ஆகியவற்றில் சீனா காட்டி வரும் வலுவான கவனத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் இங்கு பாராட்டு தெரிவித்தார்.*

*சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வலுவான ஒத்துழைப்பு உலகளாவிய தெற்கின் கூட்டான குரலை மேம்படுத்துவதாக அமைவதோடு, இது சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார ஒழுங்கை மேலும் உள்ளடக்கியதாகவும் நியாயமானதாக்கவும் சீர்திருத்தவும் உதவுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.*

*சீனாவின் இந்த வெற்றிக்கும் இலங்கையுடனான அதன் நீண்டகால உறவுக்கும் வாழ்த்துத் தெரிவித்து,*

**“New Blueprint> New Horizon”** *திட்டம் சீன மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், உலகளாவிய சௌஜன்யம் அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு இது பங்களிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.*

# பண்டிகை காலத்தில் நீர்நிலைகளில் நீராடுவதில் அவதானம் தேவை

தற்போது நிலவும் அனர்த்த நிலைமை காரணமாக நீர்நிலைகளின் தன்மை மற்றும் ஆழம் மாற்றமடைந்துள்ளதால், இந்த பண்டிகைக் காலத்தில் நீர்நிலைகளைப் பயன்படுத்தும் போது பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு சமூக மருத்துவ நிபுணர் சமித சிறிதுங்க அறிவுறுத்தியுள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் இன்று (24) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

தற்போதைய நாட்களில் நிலவும் அனர்த்த நிலைமையுடன் நீர்நிலைகளின் கட்டமைப்பு மாற்றமடைந்துள்ளது. அவற்றின் தரைப்பகுதி மற்றும் ஆழம் மாறுபட்டுள்ளது. எனவே, இவ்வாறான இடங்களைப் பயன்படுத்தும் போது எப்போதும் அவதானமாக இருங்கள். உங்களுக்குத் தெரியாத நீர்நிலைகளில் இறங்கி நீராடவோ அல்லது அதனைப் பயன்படுத்தவோ முன்னதாக, அங்கிருப்பவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். சில வேளைகளில் பழைய இடங்களாக இருந்தாலும், அனர்த்தங்களுக்குப் பிறகு அவற்றின் ஆழம் அதிகரித்திருக்கக்கூடும்.

இதேவேளை, பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு வீதி விபத்துக்கள் மற்றும் ஏனைய விபத்துக்கள் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் காணப்படுவதால், அது தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறு வைத்திய நிபுணர் சமித சிறிதுங்க கேட்டுக்கொண்டார்.

கடந்த சில வருடங்களின் தரவுகளை பகுப்பாய்வு செய்ததில், குறிப்பாக சாரதிகள், வாகனங்களில் பயணிப்பவர்கள் மற்றும் பாதசாரிகளின் கவனயீனம் காரணமாகவே பெரும்பாலான வீதி விபத்துக்கள் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், அனைவரும் தமது வாகனங்களை போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு முன்னர், அவை சரியான இயங்கு நிலையில் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவது அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சம்பத் மனம்பேரி மேலும் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரணை

ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவில் 90 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த சம்பத் மனம்பேரியை, மேலும் 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், பியல் மனம்பேரி எதிர்வரும் ஜனவரி மாதம் 07 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேக நபர்கள் இன்று (24) வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் மல்ஷா கொடிதுவக்கு இந்த உத்தரவை பிறப்பித்தார்.

கொழும்பு வடக்கு குற்றத்தடுப்புப் பிரிவு சார்பில் ஆஜரான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.கு.ளு.பெரேரா, இவ்வழக்கின் இரண்டாவது சந்தேகநபரான சம்பத் மனம்பேரியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் போதைப்பொருள் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகள் குறித்து பல தகவல்கள் வெளியாகி உள்ளதாகத் தெரிவித்தார்.

அந்தத் தகவல்களுக்கமைய மேலும் சிலரைக் கைது செய்ய வேண்டியுள்ளதாலும், சந்தேக நபரிடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெற வேண்டியுள்ளதாலும், அவரை மேலும் 90 நாட்கள் கொழும்பு வடக்கு குற்றத்தடுப்பு பிரிவில் தடுத்து வைப்பதற்கான உத்தரவை பிறப்பிக்குமாறு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது பிரதிவாதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஹர்ஷ ஜயலத், சம்பத் மனம்பேரியை தொடர்ந்தும் தடுத்து வைப்பதற்கு தாம் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும், அவரிடம் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறும் கோரினார்.

அத்துடன் சந்தேக நபரிடம் இருந்த 3 வாகனங்கள் தற்போது சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், அவை சந்தேகநபர் இந்த சட்டவிரோத சம்பவங்களுடன் தொடர்புபட்டு சம்பாதித்தவை என்பது இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்திருந்தால், அது தொடர்பான அறிக்கையையாவது நீதிமன்றில் சமர்ப்பிக்க உத்தரவிடுமாறு சட்டத்தரணி நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

சந்தேக நபருக்கு எதிராக மேலும் 90 நாட்கள் தடுப்புக் காவல் உத்தரவு வழங்கப்படுமாயின், அவரைப் பார்ப்பதற்கும் அவருக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கும் சட்டத்தரணிகள் மற்றும் குடும்பத்தினருக்குத் தேவையான அனுமதியை வழங்குமாறும் சட்டத்தரணி நீதிமன்றில் கோரினார்.

அதற்கமைய, இரு தரப்பு உண்மைகளையும் பரிசீலித்த வலஸ்முல்ல நீதவான் மல்ஷா கொடிதுவக்கு மேற்கண்ட உத்தரவுகளைப் பிறப்பித்தார். (ஐ)

# வாழ்வைக்......

உறவுகளிலும், உறவுமுறைகள் மீதும் அதிலும் குறிப்பாக இன்டிமேட் ரிலேஷன்ஷிப் மீது இருக்கும். இதை, ஃபுருஸ் லிப்டன் என்ற உயிரியலாளர் அழகாகச் சொல்வார், “மனிதர்கள் தனியாக வாழ்வதற்கானவர்கள் அல்ல. பிணைப்பு ஏற்படுத்திக்கொள்வதற்கான உயிரியல் ரீதியான ஒரு உந்துதல், ஒவ்வொரு மனிதருக்குள்ளும் அடிப்படையில் இருந்துகொண்டே இருக்கும்.”

யோசித்துப் பார்த்தால், உண்மையில் இங்கு அன்யோன்ய உறவுகள் வேண்டாம் எனச் சொல்வதற்குக் காரணம், உறவினால் வரும் அன்யோன்னியம் கடைசி வரை நிலைக்காது, குறைந்த நாள்களில் கைவிட்டுப் போய்விடும் என்ற பயம்தான்.

ஏனென்றால் மனிதர்களுக்குக் காதலிப்பது, காதலிக்கப்படுவது, அன்யோன்யமான உறவில் இருப்பது, இளமையிலும் முதுமையிலும் எல்லாப் பருவ வயதுகளிலும் பிடித்தே இருக்கிறது.

ஆக இந்த அடிப்படையான உயிரியல் தூண்டுதலும் அன்யோன்யத்தின் மீதான ஆசையும் ஒருபுறம் இழுக்க, மறுபுறம் நம் மூளை சொல்லும் வேண்டாம் என்ற தீர்வுக்கும் இடையே எழும் குழப்பம்தான்.

சிலருக்குக் குழப்பம் குறைவு. ஆனால், தேர்வு செய்வதில் சிக்கல். திருமணத்திற்குத் தயாராகிக்கொண்டிருந்த நண்பர் ஒருவர், உங்கள் துணைவர் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு இவ்வாறு பதில் அளித்தார்.

பார்பதற்கு சூப்பராக இருக்க வேண்டும்.
நன்றாக படித்திருக்க வேண்டும்.
பணக்காரக் குடும்பமாக இருக்க வேண்டும்.
நல்ல குடும்பமாக இருக்க வேண்டும்.
சமையல் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.
என் குடும்பத்தினருடன் ஒத்துப்போக வேண்டும்.
எனக்கு முழு ஆதரவாக, நான் தவறு செய்தாலும், எனக்கு ஆதரவாக இருந்த அன்பு செய்ய வேண்டும்.
நான் சொல்வது அனைத்தும் அப்படியே கேட்க வேண்டும்.
எனக்குக் கொஞ்சம் ஷார்ட் டெம்பர் எனவே அந்த நேரத்தில் அமைதி காக்க வேண்டும்.
(ஓ! பெட்ரோமாக்ஸ் லைட்டேதான் வேணும் போல!)

அவர் மனதில் இருந்ததை, அப்படியே சொன்னதற்குப் பாராட்டிவிட்டு அவரிடம், இந்த லிஸ்டில் உள்ளபடி நீங்கள் இருக்கிறீர்களா எனக் கேட்டவுடன், பதில் இல்லாமல் முழித்தார். ‘அப்படி நீங்கள் கேட்பவை எல்லாம் அடங்கிய ஒரு டிசைன் இந்த உலகத்தில் தேடுவதை விட்டுவிடலாம் வேண்டுமானால், நீங்கள் அந்த டிசைனாக இருந்துகொள்ள முயற்சி செய்யலாம். எப்போதும் லிஸ்டில் மிக முக்கியமான மூன்றிலிருந்து ஐந்து விஷயங்களை வைத்திருக்கலாம்’ என்று சொன்னேன்.

இன்னும் சிலர் அடைந்தால் மகாதேவி என்ற ரேன்ஞ்சில், தன்னைச் சட்டையே செய்யாத ஒருவரை நினைத்து வருடக் கணக்கில் உருகிக்கொண்டிருப்பார்கள். அவர்களைப் பார்த்தாலும் இதுதான் தோன்றும். ஓ! பெட்ரோமாக்ஸ் லைட்டேதான் வேணும் போல!

இந்தப் பிரபஞ்சத்தில் இத்தனை கோடி, மக்கள் இருக்கும் போது தனிமையில் வாழ வேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? குழப்பங்களையும் பிடிவாதங்களையும் ஓரமாக வைக்கலாமே?

நீங்கள் குடும்ப வாழ்வில் நுழையாமல் இருந்தால், சவால்கள் எதுவும் இல்லாமல் வாழ்வே இன்பமயமாக ஆகிவிடுமா என்ன? ஆனால், அன்யோன்யமான உறவுகள் வாழ்வில் கண்டிப்பாக இன்பத்தைச் சேர்க்கும்.

நான் தனியாக இருப்பதால்தான், இவ்வளவு சாதிக்க முடிகிறது என்பதெல்லாம், நாம் சொல்லிக்கொள்ளும் சமாதானங்களே. உண்மையில் இயற்கையாக அமைந்த பிணைப்பிற்கான உந்துதலை ஒத்துக்கொள்ளாமல் இருத்தல் அல்லது உறவுகளைக் கையாளத் தெரியாத இயலாமைகளே.

எனவே, அது திருமணமானலும் சரி, லிவ்விங் டுகெதர் அல்லது காதல் உறவானாலும் சரி. உங்களுக்கு ஏற்புடையதை வாழ்வில் வரவேற்கலாமே?

வாழ்க்கையின் எந்த அம்சமானாலும் சவால்கள் இருக்கத்தான் செய்யும். அதை எப்படிக் கையாண்டு கொண்டிருக்கிறோமோ, அதேபோல் அன்யோன்ய உறவுகளில் வரும் சவால்களையும் மிக எளிதாகக் கையாண்டு வாழ்வைக் கொண்டாடலாமே!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2025 வெளியிடப்பெற்றது.